EVERWIN VIDHYASHRAM

STD: VI TAMIL - L2 TERM –II

இயல் 5.4

மனம் கவரும் மாமல்லபுரம்

I. சிறுவினா:

1. மாமல்லபுரம் எப்படி உருவானது? அதற்கு காரணமான நிகழ்வு யாது?

மாமல்லபுரத்தின் கடற்கரையில் இருந்த குன்றை சிற்பங்களாக மாற்றியதால் மாமல்லபுரம் உருவானது.

மகேந்திரவர்ம பல்லவருடன் அவரது மகன் நரசிம்மவர்மன் இந்த கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்தார். ஒரு பாறையின் நிழல் யானைப் போல் தோன்றவே தன் தந்தையை அழைத்து காட்டினார். தந்தையும் மற்றொரு குன்றின் நிழல் கோவில் போன்று தோன்றியதால் அவற்றை சிற்பமாக மாற்றலாம் என்றார். இவ்வாறு அங்குள்ள ஒவ்வொரு குன்றுகளையும் செதுக்கி சிற்பமாக மாற்றினார்.

2. மாமல்லபுரத்தில் "அர்ச்சுனன் தபசு" பாறையில் உள்ள சிற்பங்கள் பற்றி எழுதுக.

மனிதர்கள், விலங்குகள்,பறவைகள் போன்றவை உயிருள்ளவற்றை நேரில் பார்ப்பது போல அழகாக இருக்கும்.

5.5 மயங்கொலிகள்

I. குறுவினா:

1. மயங்கொலி எழுத்துகள் யாவை?

* ண, ன,ந * ல, ழ, ள

* ர,ற ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.

2. ண, ன, ந ஆகிய எழுத்துகள் பிறக்கும் முறையை கூறுக.

ண ___ நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப் பகுதியைத் தொடுவதால் ண கரம் பிறக்கிறது.

ன - நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன் பகுதியைத் தொடுவதால் ன கரம் பிறக்கிறது.

ந - நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப் பகுதியைத் தொடுவதால் ந கரம் பிறக்கிறது.

5.6 திருக்குறள்

I. குறுவினா:

1. எப்படி உண்பது விரும்பத்தக்கது அன்று?

அமிழ்தமே ஆனாலும் விருந்தினர் இருக்கும்போது தான்மட்டும் உண்பது விரும்பத்தக்கது அன்று.

2. எது தீமையானது என்று வள்ளுவர் கூறுகின்றார்?

அடுத்தவர் பொருளைக் களவாடலாம் என உள்ளத்தால் நினைப்பது கூடத் தீமையானது.

3. ஆக்கம் யாரிடம் வழிக்கேட்டுச் செல்லும்?

தளராத ஊக்கம் உடையவனிடம் ஆக்கம் வழிக்கேட்டுச் செல்லும்.

4. நாம் எத்தகைய சொற்களைப் பேச வேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?

நாம் பயனுடைய சொற்களை மட்டுமே பேச வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

6.1 நானிலம் படைத்தவன்

I. குறுவினா:

1. நான்கு நிலங்கள் என்பன யாவை?

* முல்லை * மருதம் * குறிஞ்சி * நெய்தல்

2. தமிழன் எதற்கு அஞ்சினான்?

சான்றோர்கள் அஞ்சக்கூடிய தீமைகளைச் செய்ய அஞ்சினான்.

3. தமிழன் எதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான்?

தமிழன் ஏலம், மிளகு ஆகியவற்றை கப்பல்களில் ஏற்றி வணிகம் செய்வதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான்.

II. சிறுவினா:

1. தமிழன் தான் வாழ்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான்?

* தமிழன் கற்களும், முட்களும் நிறைந்த நிலத்தை திருத்திப் பயன்படத்தினான்.
* தனது உடல் வலிமையால் வளத்தைப் பெருக்கினான்.
* பிறகு ஊரை உருவாக்கினான்.
* ஊரை நகரமாக்கினான்.
* நகரை நாடாக்கி வாழும் பெருமையைப் பெற்றான்.

2. தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?

* பழந்தமிழன், கடல்களை கடந்து சென்று வணிகம் செய்தான்.
* அச்சம் தரும் போர்களில் வெற்றி கண்டான்
* இமயமலையில் தன் வெற்றிக் கொடியை நாட்டினான்.
* ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்தான்.
* சான்றோர்கள் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சினான்.

6.2 கடலோடு விளையாடு

I. குறுவினா:

1. அலையையும், மேகத்தையும் மீனவர்கள் என்னவாகக் கருதுகின்றனர்?

* மீனவர்கள், அலையை தோழனாகவும்.
* மேகத்தை குடையாகவும் கருதுகின்றனர்.

2. கடல்பாட்டில் கண்ணாடியாகவும், தலைவனாகவும் குறிப்பிடப்படுவன யாவை?

* கடல்பாட்டு, கண்ணாடியாக முழு நிலவையும்,
* தலைவனாகப் பெருவானத்தையும் குறிப்பிடுகிறது.

3. மீனவர்கள் தமது வீடாகவும் செல்வமாகவும் கருதுவன யாவை?

கட்டுமரம் தான் அவர்கள் வாழும் வீடு, வலைவீசிப் பிடிக்கும் மீன்களே அவர்களது செல்வம்.

6.3 வளரும் வணிகம்

I. குறுவினா:

1. வணிகம் என்றால் என்ன?

ஒரு பொருளைப் பிறரிடம் இருந்து வாங்குவதும் பிறருக்கு விற்பதும் வணிகம் ஆகும்.

2. பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டுத் தருக?

* நெல்லைக் கொடுத்து அதற்குப் பதிலாக உப்பைப் பெற்றனர்.
* ஆட்டின் பாலைக் கொடுத்துத் தானியத்தைப் பெற்றனர்.

3. சிறு வணிகப் பொருட்கள் யாவை?

* பால் * கீரை * காய்கறிகள் * பழங்கள் * அலங்காரப் பொருட்கள்

II. சிறுவினா:

1. சிறுவணிகம், பெருவணிகம் வேறுபடுத்துக.

| சிறு வணிகம் | பெரு வணிகம் |
|---|---|
| * சிறு தொகையை முதலீடு செய்வர். | * பெருந்தொகையை முதலீடு செய்வர். |
| * பெரு வணிகரிடம் இருந்து பொருட்களைப் பெறுவர். | * உற்பத்தி செய்யும் இடத்தில் இருந்து பொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்வார். |
| * பொருட்களை குறைந்த அளவில் வாங்கி விற்பனை செய்வர். | * பொருட்களை அதிக அளவில் வாங்கி விற்பனை செய்வர். |
| * இவர்கள் நுகர்வோரிடம் நேரடித் தொடர்பு கொள்பவர்கள் ஆவர். | * நுகர்வோருடன் நேரடித் தொடர்பு இருப்பது அரிது. |

2. பந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் எவை?

ஏற்றுமதி பொருட்கள்:

* தேக்கு * மயில் தோகை * அரிசி * சந்தனம்
* இஞ்சி * மிளகு

இறக்குமதி பொருட்கள்:

* கண்ணாடி * கற்பூரம் * பட்டு * குதிரைகள்

இயல் - 6.5: இலக்கணம்

சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள்

I. வினாவிடை:

1. சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?

ஒன்றை சுட்டிக் காட்ட பயன்படும் எழுத்துகள் சுட்டு எழுத்து எனப்படும். அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். (உ- என்னும் எழுத்து தற்பொழுது வழக்கத்தில் இல்லை.

2. அகவினா - புறவினா - வேறுபாடு யாது?

| அகவினா | புறவினா |
|---|---|
| i) வினா எழுத்துகள் சொல்லின் அகத்தே இருந்து வினாப் பொருளைத் தரும். (எ.கா) எது? | வினா எழுத்துகள் சொல்லின் புறத்தே இருந்து வினாப் பொருளைத் தரும். (எ.கா) அவனா? |

கவிதைப் பேழை - பாரதம் அன்றைய நாற்றங்கால்

I. குறுவினா:

1. தாரா பாரதியின் பாடலில் இடம் பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

திருவள்ளுவர், காளிதாசர், கம்பர்

2. இந்தியாவின் மேற்கு, கிழக்கு, ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக.

மேற்கு தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன.

உரைநடை - தமிழ்நாட்டில் காந்தி

I. குறுவினா:

1. காந்தியடிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழைய வில்லை?

ஏனெனில் அக்கோவிலுக்குள் செல்ல ஒரு சிலருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இக்காரணத்தால் காந்தியடிகளும் கோவிலுக்குள் நுழைய விரும்பவில்லை.

2. காந்தியடிகளுக்கு தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் உரிமைக்காக போராடும் போது பெரும்பாலானோர் தமிழர்கள் இருந்ததாலும் தமிழின் மீது கொண்ட ஆர்வத்தாலும் காந்தியடிகள் தமிழ் கற்கத் தொடங்கினார்.

II. சிறுவினா:

1. காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.

1921-ஆம் ஆண்டு காந்தியடிகள் மதுரைக்குச் சென்றார். அப்போது வயலில் வேலை செய்த உழவர்கள் இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே அணிந்து இருந்தனர். இந்தியர்கள் போதிய உடைகள் இல்லாமல் இருக்க தான். மட்டும் நீளமான வேட்டி, மேல்சட்டை, பெரிய தலைப்பாகை அணிவதா என எண்ணி தன் உடையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

2. காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.

* தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த போது தமிழ்க் கற்கத் தொடங்கினார்.
* ஜி.யு.போப் எழுதிய தமிழ்க் கையேடு அவரை மிகவும் கவர்ந்தது.
* மிகவும் விரும்பிய நூல் திருக்குறள்
* "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ்க் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது." என்று உ.வே.சா அவர்களை பாராட்டினார்.

இதுவே காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு ஆகும்.

இயல் - 7.4: நால்வகைச் சொற்கள்

I. குறுவினா:

1. சொல் என்றால் என்ன?

ஓர் எழுத்து தனித்தோ அல்லது பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தருவது சொல் எனப்படும். (எ.கா) பூ, கல், பூக்கள்

2. சொற்களின் வகைகளை எழுதுக.

இலக்கண அடிப்படையில் சொற்கள் நான்கு வகைப்படும். அவை

i) பெயர்ச்சொல் ii) வினைச்சொல் iii) இடைச்சொல்
iv) உரிச்சொல்

3. பெயரையும், வினையையும் சார்ந்து வரும் சொற்களை எவ்வாறு வழங்குகிறோம்?

* ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொற்களை பெயர்ச்சொல் என்று வழங்குகிறோம்.

(எ.கா) பாரதி, பள்ளி, காலை, நன்மை

* ஒன்றன் செயலை குறிக்கும் சொல்லை வினைச்சொல் என்று வழங்குகிறோம்.

(எ.கா) வா, போ, எழுது, விளையாடு

## இயல் - 8.1: பராபரக் கண்ணி

I. குறுவினா:

1. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?

அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.

2. இன்பநிலை எப்போது வந்து சேரும்?

அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக இருந்தால் இன்பநிலை தானே வந்து சேரும்.

II. சிறுவினா:

1. பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?

i) அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.

ii) அன்பர்க்கு தொண்டு செய்பவராக என்னை ஆக்கிவிட்டால் போதும் இன்பநிலை தானே வந்து சேரும்.

iii) எல்லாரும் இன்பமாக வாழவேண்டும் என்று தாயுமானவர் கூறுகிறார்.

## இயல் - 8.2: நீங்கள் நல்லவர்

I. குறுவினா:

1. பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?

பழம்:

கொடுப்பது பழத்தின் இயல்பு.

வேர்:

பெறுவது வேரின் இயல்பு.

2. உழைக்கும்போது என்னவாக ஆகிறோம்?

உழைக்கும் போது புல்லாங்குழலாகி விடுகிறோம்.

## இயல் - 8.3: பசிப்பிணி போக்கிய பாவை

I. குறுவினா:

1. அமுதசுரபியின் சிறப்பு யாது?

அமுதசுரபியின் சிறப்பு

* அமுதசுரபியின் பாத்திரத்தில் இட்ட உணவு எடுக்க எடுக்கக் குறையாமல் வளர்ந்து கொண்டே இருக்கும்.

* அதனைக் கொண்டு எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் உணவு அளிக்கலாம்.

2. "கோமுகி" என்பதன் பொருள் யாது?

கோ - என்றால் பசு. முகி - என்றால் முகம். பசுவின் முகம் போன்று அமைந்து இருப்பதால் இப்பொய்கை கோமுகி என்னும் பெயரைப் பெற்றது.

* இதுவே மணிமேகலையின் வேண்டுகோள்.

II. சிறுவினா:

1. மணிபல்லவத்தீவு எவ்வாறு காட்சி அளித்தது?

எங்குப் பார்த்தாலும் வெண்மணல் குன்றுகள். பூத்துக் குலுங்கும் செடி கொடிகள் அடர்ந்த மரங்கள் இடையே பொய்கைகள் மனதை மயக்கும் படி மணிபல்லவத்தீவு காட்சி அளித்தது.

2. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?

* சிறைச்சாலைகளில் உள்ளவர்களுக்கு எவை நன்மைகள், எவை தீமைகள் என்பவற்றை தக்க அறிஞர்கள் மூலம் எடுத்துக் கூற வேண்டும்.

* பெற்றோரை மதித்தல், முதியோரைப் பேணல், உறவினர்களை அரவணைத்தல் போன்றவற்றை வலியுறுத்தும் அறநெறிக் கல்வியை அளிக்க வேண்டும்.

## இயல் - 8.5 பெயர்ச் சொல்

I. குறுவினா:

1. பெயர்ச் சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

விடை: பெயர்ச் சொல் ஆறு வகைப்படும். அவை:

| | | |
|---|---|---|
| 1. பொருட் பெயர் | 2. இடப் பெயர் | 3. காலப் பெயர் |
| 4. சினைப் பெயர் | 5. பண்புப் பெயர் | 6. தொழிற்பெயர் |

2. இடுகுறிப் பெயர் என்றால் என்ன?

விடை: நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதாமல் சில பெயர்களை இட்டு வழங்கினர். அவ்வாறு இட்டு வழங்கியப் பெயர் இடுகுறிப் பெயராகும்.

3. காரணப் பெயர் என்றால் என்ன?

விடை: நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதிச் சில பெயர்களை இட்டனர். இவ்வாறு காரணத்தோடு ஒரு பொருளுக்கு வழங்கும் பெயர் காரணப் பெயர் எனப்படும்.

II. சிறுவினா:

1. அறுவகைப் பெயர்ச் சொற்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. பொருட் பெயர் | 2. இடப் பெயர் | 3. காலப் பெயர் |
| 4. சினைப் பெயர் | 5. பண்புப் பெயர் | 6. தொழிற்பெயர் |

2. அறுவகைப் பெயர்ச் சொற்களுக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

1. பொருட் பெயர் - எ. கா: மரம் புத்தகம்.
2. இடப் பெயர்: எ. கா.: சென்னை, பூங்கா.
3. காலப் பெயர் - எ. கா.: சித்திரை, நாள்.
4. சினைப் பெயர் - எ.கா.: கண், இலை.
5. பண்புப் பெயர்- எ. கா.: வட்டம், செம்மை.
6. தொழிற்பெயர் - எ. கா.: படித்தல், நடித்தல்.

## 8.5 திருக்குறள்

I. குறுவினா:

1. அறிவின் பயன் யாது?

விடை: பிற உயிரியின் துன்பத்தைத் தமது துன்பம் போல் கருதுவதே அறிவின் பயன்.

2. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?

விடை: நம்மிடம் இருப்பதை பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும்.

3. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?

விடை: இல்லாதவர்களுக்கு தருவதே ஈகை, மற்றவை எல்லாம் பயனை எதிர்பார்த்துச் செய்பவை என்று ஈகை பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

## 9.1 ஆசிய ஜோதி

I. குறுவினா:

1. அரசனாலும் செய்ய முடியாத செயல் எது?

விடை: இறந்த உடலுக்கு உயிர் கொடுத்து எழுப்புவது என்பது அரசனாலும் செய்ய முடியாத செயல்.

2. எறும்பு எதற்காகப் பாடுபடுகிறது?
விடை: இப்பூமியில் உயிர் பிழைத்து வாழ்வதற்காகத்தான் எறும்பு பாடுபடுகிறது.
3. ஒரு நாளும் விட்டுச் செல்லாதது எது?
விடை: ஒருவர் செய்யும் நன்மையும் தீமையும் ஒருநாளும் அவரை விட்டுச் செல்லாது.
4. உலகம் முழுமையும் எப்போது ஆள முடியும்?
விடை: நல்ல மனம், இரக்க குணம், நேர்மையான வாழ்வு வாழ்பவர்களால் மட்டுமே இவ்வுலகம் முழுமையும் ஆள முடியும்.

II. சிறுவினா:

1. எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர் பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?
விடை: புத்தர்பிரான் கூறும் அறிவுரைகள்:

வாழ்கின்ற உயிர்களை அழிப்பது என்பது எளிய செயல் ஆனால் இறந்த உடலை உயிர் கொடுத்து எழுப்புவது என்பது அரசனாலும் முடியாத செயல். எல்லாரும் தம் உயிரைப் பெரிதாக மதித்துப் பாதுகாக்கின்றனர். எறும்பு கூடத் தன் உயிரை காத்துக் கொள்ள ஆட்டின் உயிரை எடுப்பதால் பாவங்கள் விட்டுச் செல்லுமா? ஒருவர் செய்த நன்மை, தீமை ஒருநாளும் அவரை விட்டுச் செல்லாது. ஆகையால் பிற உயிர்களைக் கொல்லும் செயலைச் செய்யாதீர்கள், மக்களோடு சேர்ந்து மற்ற உயிர்களும் வாழ வழி செய்யுங்கள் என்று புத்தர் பிரான் கூறுகிறார்.

## இயல் 9.1 மனித நேயம்

I. குறுவினா:

1. யாரால் உலகம் இயங்கி கொண்டு இருக்கிறது?
மனித நேயத்துடன் வாழ்பவர்களால் தான் உலகம் இயங்கி கொண்டிருக்கின்றது.
2. வள்ளலார் பசிப்பிணியை நீக்க என்ன செய்தார்?
வள்ளலார் தன்னுடைய பெருமுயற்சியால் வடலூரில் சத்திய தருமச் சாலையைத் தொடங்கி எல்லாருக்கும் உணவளித்தார்.
3. அன்னை தெரசா கண்ணீர் விடக் காரணம் என்ன?
தொழு நோயால் பாதிக்கப்பட்ட மூதாட்டியை உறவினர்களே வெறுத்து விட்டதை நினைத்து அன்னை தெரசா கண்ணீர் விட்டார்.

II. சிறுவினா:

1. கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்த இளமைக்கால நிகழ்வு யாது?

* கைலாஷ் சத்தியார்த்தி தினமும் பள்ளிக்கு செல்லும் பொழுது சாலையோரத்தில் ஒரு சிறுவனைக் கண்டார்.
* அவன் தன்னைப்போல் பள்ளிக்கு வராமல் தன் தந்தையுடன் அமர்ந்து வேலை செய்வதைக் கண்டு, இதைப்பற்றி தன் ஆசிரியரிடமும், பெற்றோரிடமும் கேள்வி கேட்டார்.
* அவன் தன்னுடைய வீட்டின் உணவுத் தேவைக்காக பள்ளிக்கு வராமல் வேலைப் பார்க்கின்றான் என்ற பதில் அவருக்கு மிகுந்த மன வருத்தத்தைக் கொடுத்தது.
* இந்நிகழ்வே பிற்காலத்தில் அவரைப் பள்ளி செல்லாத குழந்தைகள் மேல் பரிவு கொள்ள வைத்தது.
* இதுவே நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாகவும் அமைந்தது.

## இயல் 9.2 முடிவில் ஒரு தொடக்கம்

I. சிறுவினா:

1. "முடிவில் ஒரு தொடக்கம்" என்ற தலைப்பின் காரணம் குறித்து எழுதுக?
ஒருவர் தன் உடலுறுப்புகளை தானம் செய்வதன் மூலம், அவர் இறந்த பின்பும் அவரது உடல் உறுப்புகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இதுவே 'முடிவில் ஒரு தொடக்கம்' என்ற தலைப்பின் அமைப்பிற்கு காரணமாகும்.
2. இக்கதைக்குப் பொருத்தமாக மற்றொரு தலைப்பிடுக?
இக்கதைக்கு 'மறு பிறவி', என்ற தலைப்பு பொருத்தமாக அமையும்.

## இயல் 9.3 அணி இலக்கணம்

I. குறுவினா:

1. உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் யாது?
உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் இயல்பு நவிற்சி அணி ஆகும்.
2. உயர்வு நவிற்சி அணி என்பது யாது?
ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது உயர்வு நவிற்சி அணி ஆகும்.

## கடிதம்

பிறந்தநாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

தேதி: 05.10.2019
இடம்: சென்னை

அன்புள்ள மாமாவுக்கு,

நலம், நலமறிய ஆவல். ஒவ்வொரு வருடமும் எனது பிறந்த நாளுக்கு சிறந்த பரிசுகளை அனுப்பி வைத்தீர்கள். ஆனால் இந்த வருடம் நீங்கள் அனுப்பிய கைக்கடிகாரம் மிகவும் அழகாக உள்ளது. ஏனெனில் நேரம் தவறாமல் ஒவ்வொரு செயலும் செய்ய வேண்டும் என்பதை எனக்கு உணர்த்துகிறது. அதனால் இதை மிகச் சிறந்த பரிசாக கருதுகிறேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள,
எழில்

உறைமேல் முகவரி:
அ. தமிழன்பன்,
எண: 2, கங்கை தெரு,
மதுரை.